# இத்தாவும் அதன் சட்டங்களும் (03)

(தொடர் - 03)

## தலாக்கும் தலாக் சொல்லப்பட்ட பெண்ணின் இத்தாவும்

அல்லாஹ் கூறுகின்றான் “ (உங்கள்) மனைவிகளை நீங்கள் அவர்களிடம் மன நிம்மதி பெறுவதற்காக, உங்களில் இருந்தே உங்களுக்காக அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும், கிருபையையும் ஆக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் இருப்பதாகும் …”

(அர்ரூம் : 21)

மேற்சொன்ன வசனம் திருமணம் என்ற பந்தத்தின் அடித்தளமானது அன்பையும், கிருபையும், மனநிம்மதியும்தான் என உணர்த்துகின்றது. இதுவே திருமண பந்தத்தில் இணையும் தம்பதியினரின் ஆசையாகவும் அவாவாகவும் உள்ளது.

எனினும், சில சந்தர்ப்பங்களும் பிரச்சினைகளும் அவர்களின் அவாக்களை சின்னாபின்னமாக்கி அவர்களுக்குள் வெறுப்பை ஏற்படுத்துகிறது. இந்த வெறுப்பே அவர்களை பிரிவின்பால் கூட்டிச் செல்கின்றது.

தலாக் என்பது மொழி ரீதியாக முடிச்சை அவிழ்த்தல் என்றும், மார்க்க ரீதியாக திருமண முடிச்சை அவிழ்த்தல் என்றும் பொருள்படும். ஒரு கணவன் தன் மனைவியில் அதிருப்தியடையும்போது அவன் அவர்களுக்கு மத்தியில் இருக்கும் பந்தத்தை முறிப்பதே இங்கு நாடப்படுகிறது.

### தலாக்கின் முன்னுள்ள படித்தரங்கள்.

ஒரு கணவன் தன் மனைவியின் குணங்களிலோ அல்லது நடவடிக்கைகளில் சிலவற்றிலோ அதிதிருப்தியடைந்தால், அவன் உடனடியாக அப் பெண்ணை தலாக் சொல்ல முடியாது. மாறாக இஸ்லாம் கணவனுக்கு பல புத்திமதிகளையும் கட்டங்களையும் கற்றுக் கொடுக்கின்றது.

அல்லாஹ் முதல் கட்ட நடவடிக்கையாக புத்திமதி கூறுமாறு சொல்கின்றான்.

“(அப்பெண்களாகிய) அவர்களிலிருந்து (தம் கணவனுக்கு) அவர்களின் மாறுபாட்டை அஞ்சுகிறார்களோ அப்போது அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்”

(அந் நிஸா :34)

இறைதூதர் அவர்களும் அதனையே சொல்லுகின்றார்.

“பெண்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என உங்களுக்கு நான் உபதேசம் செய்கின்றேன். ஏனெனில் பெண்கள் (வளைந்த) விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டுள்ளனர். விலா என்பின் கோணலான அதன் மேல் பகுதியாகும். அதை நீ (பலவந்தமாக) நிமிர்த்தப்போனால் உடைந்து விடுவாய் அதை அப்படியே விட்டு விட்டால் கோணலாகவே அது நீடிக்கும். ஆகவே, பெண்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என உபதேசிக்கின்றேன்”

(ஆதாரம்: புஹாரி 5186)

முஸ்லீமின் இன்னுமொரு அறிவிப்பிலே

“அதை உடைப்பதுதான் அவளைத் தலாக் சொல்வதாகும்” என வந்துள்ளது. இதன் அடிப்படையிலே அல்லாஹ் தன் திருமறையில் சூறா அந் நிஸா 34வது வசனத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையாக குறிப்பிடுகின்றான். (அவர்கள் திருந்தாவிடில்) படுக்கையில் அவர்களை வெறுத்து (ஒதுக்கி விடுங்கள் (அதிலும் அவர்கள்) சீர்திருந்தாவிடில்) (காயமேற்படாதவாறு அடியுங்கள்) அதனால் அவர்கள் உங்களுக்கு கீழ்பட்டுவிட்டால் அவர்கள் மீது (வேறு குற்றங்களை சுமத்த) யாதொரு வழியையும் தேடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக உயர்ந்தவனாகவும் பெரியவனாகவும் இருக்கின்றான். இன்னும் (கணவன், மனைவியாகிய) இருவருக்குள் (பிணக்கு உண்டாகி) பிரிவை நீங்கள் அஞ்சினால், அப்போது அவன் குடும்பத்தாரில் ஒரு மத்தியஸ்தரையும், அவள் குடும்பத்தாரின் ஒரு மத்தியஸ்தரையும் (ஏற்படுத்தி) அனுப்புங்கள். அவ்விருவரும் (இவர்களுக்குள்) சமாதானத்தை உண்டுபண்ண நாடினால், அல்லாஹ் இவ்வுருவரையும் ஒற்றுமையாக்கி விடுகின்றான். நிச்சயமாக அல்லாஹ் தெரிந்தவனாகவும் நன்கு உணர்கின்றவனாகவும் இருக்கின்றான்.

மேற்சொல்லப்பட்ட படித்தரங்களின் பின்னரே ஒரு கணவன் தன் மனைவியை தலாக் சொல்வார்.

**எந்த நிலையில் தலாக் சொல்வான்?**

அல்லாஹ் கூறுகிறான் “நபியே (விசுவாசிகளுக்கு கூறுவீராக) நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய் (ய முற்படு)வீர்களாயின் அவர் இத்தா இருப்பதற்குரிய (மாத விலக்கு நீங்கி அப்பெண்கள் சுத்தமாகி தாம்பத்திய உறவின்றி இருக்கும்) சந்தர்ப்பத்தில் விவாகரத்துச் செய்யுங்கள்” (அத்தலாக் - 01) நபி (ஸல்) அவர்களின் காலத்தில், தன் மனைவி மாதவிலக்குடன் இருக்கும் நிலையில் அவளைத் தலாக் சொன்ன இப்னு உமர் (ரழி) அவர்கள் நபிகளாரால் அவளை மீட்டியெடுத்து அவர் சுத்தமடைந்ததன் பின் தான் நாடினால் தலாக் சொல்லுமாறு ஏவப்பட்டார். இந்த சம்பவம் புஹாரியில் பதிவாகியுள்ளது. எனவே, ஒரு பெண் மாதவிலக்கோடு இருக்கும்போது அவள் தலாக் சொல்லப்படமாட்டாள். அவ்வாறே குழந்தை பெற்றெடுத்த தீட்டுடன் இருக்கும்போதும் அவள் தலாக் சொல்லப்படமாட்டாள் என்பதே அறிஞர்களின் கருத்தாகும்.

மாறாக, அப் பெண் இன்னும் மாதவிலக்கை அடையாதவர்களாகவோ அல்லது மாதவிலக்கிலிருந்து நிராசையடைந்தவளாகவோ அல்லது கர்ப்பிணியாகவோ இருந்தால் அக்கணவன் தான் நாடும் நேரத்தில் தலாக் சொல்லலாம். இது தான் திருமணம் செய்து என்றும் தாம்பத்திய உறவில் ஈடுபடாமல் இருக்கும் பெண்ணின் சட்டமாகும்.

ஒரு கணவன் தான் எத்தனை தடவையும் தன் மனைவியை தலாக் சொல்வதற்கும் பின் மீட்டியெடுப்பதற்கும் இஸ்லாம் அனுமதியளிக்கவில்லை. மாறாக அல்லாஹ் சூறா பகராவில் 229ம் வசனத்தில் “(மீட்டிக் கொள்ள உரிமை பெற்ற) தலாக் இரு தடவையாகும். முறைப்படி (அவர்களை) வைத்துக் கொள்ளலாம் அல்லது நன் முறையில் அவர்களை விட்டுவிடலாம்” எனக் கூறுகிறான். இதன் மூலம் ஒரு கணவன் தன் மனைவியை அவளை இத்தா காலத்தில் மீட்டியெடுப்பதாக இருந்தாலும், அல்லது இத்தாவின் பின் புதிய திருமண ஒப்பந்தத்தில் இணைவதாகயிருப்பினும் அது இரு தடவைகள் மாத்திரம்தான் என தெளிவாகிறது.

2ம் தலாக்கின் பின் சேர்ந்து வாழும் கணவன் மீண்டும் 3வது தலாக் சொன்னால் அதன் பின் அவள் வேறொரு திருமணம் செய்து கணவனை பிரிந்ததன் பின்னரே மீண்டும் புதிய திருமணத்தின் மூலம் இணையலாம். இதனை இறைவன் பின்வருமாறு கூறுகின்றான்.

“பின்னரே (3வதாகவும்) அவளை அவன் ‘தலாக்’ சொல்லிவிட்டால் அதன்பிறகு அவனல்லாத (வேறு) கணவனை அவள் திருமணம் செய்யும்வரை அவள் அவனுக்கு ஆகுமானவளாகமாட்டாள். பின்னர் (அவளைத்திருமணம் செய்து கொண்ட 2ம் கணவனாகிய அவன் அவளைத் தலாக் கூறிவிட்டால் (முதற் கணவரும் தலாக் கூறப்பட்ட மனைவியுமாகிய) அவ்விருவரும் அல்லாஹ் ஏற்படுத்திய வரம்புகளை நிலைநிறுத்துவது எனக் கருதினால் (புதிய திருமண ஒப்பந்தத்தின் மூலம் கணவன் மனைவியாகிய மீண்டும் இணைந்து கொள்வது அவ்விருவர் மீதும் குற்றமில்லை)”

(அல் பகறா : 230)

இரண்டாவது கணவனுக்கு இச்சட்டம் எம் சமுதாயத்தில் பொம்மைத்திருமணமாக நாடாத்தப்படுவதை காணமுடிகிறது. அதாவது, முந்திய கணவனுடன் இப்பெண்ணை இணைக்க வேண்டும் என்பதற்காக எங்கேயாவது வயது முதிர்ந்த ஒருவரைத் தேடிக்கண்டுபிடித்து அவரை பெயருக்குத் திருமணம் செய்துவைத்து மறுநாள் காலையில் அவரை தலாக் சொல்ல வைக்கின்றனர். இதன் மூலம் தங்களைத் தாங்களே ஏமாற்றி அல்லாஹ்வுக்கு சூழ்ச்சி செய்யும் கூட்டங்களின் பட்டியலில் தங்களின் பெயர்களை இணைத்துக் கொள்கின்றனர்.

ரி∴பாஆ அல்குறழி (ரழி) அவர்களினால் தலாக் சொல்லப்பட்ட மனைவி வேறொரு திருமணம் செய்துவிட்டு தன் முந்திய கணவனை ரி∴பாஆவுடன் சேர விரும்புவதாக கூறியபோது நபியவர்கள் “இல்லை, நீ இவரிடம் சுகத்தை அனுபவிக்கும்வரையிலும், அவர் உன்னிடம் சுகத்தை அனுபவிக்கும் வரையிலும் (முதற் கணவனை நீ மணந்து கொள்ள முடியாது)” என கூறிய இச்சம்பவம். (புகாரி 5317வது ஹதீஸ்) இச்சட்டத்தை அழகாகத் தெளிவுபடுத்துகிறது.

கடன் கொடுக்கல் வாங்கல், திருமணம் போன்ற முக்கியமான விடயங்களுக்கு 2 சாட்சியங்கள் அமைப்பது போன்று தன் மனைவியைத் தலாக் சொல்வதற்கும் சாட்சியங்களை ஆக்குவது (இறைவனுக்கு) பொருத்தமானதாகும்.

மேலும், தலாக் சொல்லப்பட்ட பெண்ணிடமிருந்து கணவன் தான் திருமணத்தின்போது கொடுத்த திருமணக் கொடையை (மஹர்) மீட்டிப்பெறுவது அவருக்கு அனுமதியாகாது என்பதை இறைவன் “ இன்னும் நீங்கள் அவர்களுக்கு கொடுத்தவற்றிலிருந்து யாதொன்றையும் எடுத்துக் கொள்வது உங்களுக்கு ஆகுமானதல்ல” என சூறா அல் பகறாவில் 229வது வசனத்தில் தெளிவுபடுத்துகிறான்.

**தொடரும்..................**

**- விகாயாபின்து நூறு முஹம்மட் அஷ்ஷரயியா –**

சிறீலங்காமுஸ்லிம்ஸ்